G3

இணைப்பு 01

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையில் இருக்கும் மற்றும் அரச சேவையில் இல்லாத பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்குச் ஆட்சேர்த்தல் - 2026

நேர்முகப் பரீட்சைக்காகச் சமூகமளிப்பதற்கான அறிவுறுத்தல்கள்

01. பொது நேர்முகப் பரீட்சை

1.1 இந்த நேர்முகப் பரீட்சைக்காகத் தகுதி பெற்றுள்ள தாங்கள், பின்வரும் சான்றிதழ்கள்/ஆவணங்களின் மூலப்பிரதிகளின் கோவை ஒன்றையும் நகல் பிரதிகள் (நகல் பிரதிகள் தங்களால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்) இணைக்கப்பட்ட கோவை ஒன்றுடனும், இதனுடன் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் 2 ஆம் பந்தியின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் பொது நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடத்திற்கு சமூகமளிக்க வேண்டும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்

I. தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் வெளிநாட்டுப் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

II. பிறப்புச் சான்றிதழ் (சுருக்கமான சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. திருமணத்தின் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் திருமணச் சான்றிதழுடன் சத்தியக் கடதாசியொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

III. **பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைச் சான்றிதழ்**

(பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு இணையாக ஏற்றுக்கொள்ளப்படும் பரீட்சைகளில் சித்தி பெற்றவர்கள் அது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழை எடுத்துவருவது கட்டாயமாகும்.)

IV. செல்லுபடியாகும் பட்டச் சான்றிதழ் மற்றும் பட்டப்படிப்பில் கற்றுள்ள பாடங்கள் அடங்கிய விரிவான பெறுபேற்று அறிக்கை (Academic Transcript)

V.

(a) தான் நேர்முகப் பரீட்சைக்குத் தகுதி பெற்றுள்ள பாடங்களுக்கு அமைவாக வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடம் அல்லது/ பாடத் தொகுதியினை (1/3) உறுதிப்படுத்துவதற்காக உரிய பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அல்லது பதிவாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட F1 படிவம்

(b) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் கீழே தரப்பட்டுள்ள இணைப்பினூடாக காட்டப்பட்டுள்ள F1 மாதிரிப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள்/ பல்கலைக்கழகங்களுக்கு உரித்தாகாத உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களிலிருந்து பட்டத்தைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள், தான் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள மாகாணத்திற்குரிய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் 2026.11.01 ஆம் திகதி முதல் 2026.11.07 ஆம் திகதி வரையில் காட்சிப்படுத்தப்படும் கூகுள் படிவத்தை (Google Form) நிரப்பித் தனது பட்டச் சான்றிதழ் மற்றும் விரிவான பட்டச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை (Scanned Copy) அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்கமைய நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் இவ் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிக்கு அமைவாகப் பாட உள்ளடக்கம் தொடர்பாக ஆராய்ந்து நேர்முகப் பரீட்சை சபையினரிடம், அக் குழுவின் தீர்மானம் அனுப்பி வைக்கப்படும். ஆகையினால் மேலே குறிப்பிடப்பட்ட கூகுள் படிவத்தின் மூலம் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

<u>F1 படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பல்கலைக்கழகங்கள்/ நிறுவனங்கள்:</u>

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தினுள் பிரவேசித்து அதன் பிரதான "மெனுவில்"

பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் செல்லுமாறும்ல; அதன் கீழ் கீழ்வரும் ஒழுங்கு முறைப்படி பிரவேசித்து உரிய பல்கலைக்கழகம்/ நிறுவனத்தை பரிசோதிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

"பல்கலைக்கழகம்"

"மண்டபம்"

"ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்"

"வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவான பாடநெறிகள்"

"ஏனைய அரச பல்கலைக்கழகங்கள்"

1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 அ உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் பட்டங்கள்

VI. நிரந்தர வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் மற்றும் வாக்காளர் இடாப்பு பதிவின் சுருக்கம் **(க.கொ:- வாக்காளர் இடாப்பின் சுருக்கம் - தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து வாக்காளர் இடாப்பின் சுருக்கத்தைப் பெற்றுக்கொள்வது போதுமானதாகும்.)**

VII. தங்களால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களிலுள்ள பெயரில் மாற்றங்கள் நிலவுமாயின் அதற்குரிய சத்தியக்கடதாசி

VIII. முழுநேர அங்கவீனமுற்றவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களுக்காக இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புப் பெற்ற விண்ணப்பதாரர்கள், இவ் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள F2 படிவத்தை உரிய வைத்தியசாலைக்கு சமர்ப்பித்து, மருத்துவப் பரிசோதனைக் குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட அப் படிவத்தினை (முழுநேர அங்கவீனமுற்றவர்கள், உரிய வைத்தியசாலைக்கு சமூகமளிக்கவேண்டிய நேரமானது; குறித்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைத்துள்ள தொலைபேசி இலக்கத்திற்குத் தொலைபேசி மூலம் அறிவிப்பதற்கு 2026.11.01 – 2026.11.07 இற்கு இடைப்பட்ட காலத்தினுள் இவ் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும்.)

IX. பொலிஸ் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தங்களது விரலடையாளங்களுக்குரிய பொலிஸ் நன்னடத்தை அறிக்கை (பொலிஸ் நன்னடத்தை அறிக்கை பெற்றுக்கொள்வது தொடர்பாக அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள F3 மாதிரிப் படிவம் மற்றும் அறிவுறுத்தல்களுக்கமைய) – இலக்கம் 2476/18 மற்றும் 2026.02.18 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தம் செய்யப்பட்ட இலக்கம் 2474/19 மற்றும் 2026.02.02 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் மாத்திரம் பொருந்தும்.

X. வர்த்தமானிப் பத்திரிகையின் குறிப்பு 4/ 6 இன் பிரகாரம் தாங்கள் தகுதி பெறும் பாடங்களுக்கு அமைவாக மேற்கூறப்பட்ட IV இல் காட்டப்பட்டுள்ள பட்டச் சான்றிதழுக்கு மேலதிகமாக ஏனைய சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அச் சான்றிதழ்கள்

XI. தங்களுக்கு தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும் அழைப்புக் கடிதத்துடன் உள்ள G5 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பாடசாலைத் தெரிவுகள் அடங்கிய அச்சிடப்பட்ட பிரதி.

XII. பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுப்பியுள்ள அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் சத்தியக் கடதாசி ஒன்றுடன், குறிப்பிட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள F4 என காட்டப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சேவையை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (இலக்கம் 2476/18 மற்றும் 2026.02.18 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம்

திருத்தம் செய்யப்பட்ட இலக்கம் 2474/19 மற்றும் 2026.02.02 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் குறிப்பு 3 இன் மூலம் உள்ளடங்குகின்ற விண்ணப்பதாரர்கள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் மூலப்பிரதிகளும் **பொது நேர்முகப் பரீட்சை நாளன்றே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

மிகவும் முக்கியமானது: **மேலும், இந்த அனைத்து சான்றிதழ்களதும் நகல் பிரதிகள் அடங்கிய கோவை ஒன்றை தங்களது முழுப் பெயர் / தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எடுத்து வரவேண்டும் என்பதுடன், அக் குறிப்பிட்ட ஒவ்வொரு ஆவணமும் தங்களால் கையொப்பமிடப்பட்டு உண்மையான பிரதிகள் என உறுதிப்படுத்தப்பட்டு, மேலே 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவரிசைக்கு அமைவாக ஆவணங்களைக் குறிப்பிட்டுச் சத்தியக்கடதாசி (இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள F5 படிவம்) மூலம் நேர்முகப்பரீட்சை சபையினரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். (இதன் போது அக் கோவையில் மேலே** 1.1 இல் V(a), VII, VIII, IX, X, XI மற்றும் XII எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் மீண்டும் வழங்கப்பட மாட்டாது என்பதால், அவசியமாயின், அவைகளின் நகல் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.)

தாங்கள் பொது நேர்முகப் பரீட்சையில் தகுதி பெறும் விண்ணப்பதாரரொருவராயின், அன்றைய தினமே நடைபெறவுள்ள வர்த்தமானிப் பத்திரிகையின் 10.3 ஆம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செய்முறைப் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும் என்பதால் அதற்காகவும் தயாராக வருகை தருவது அவசியமாகும்.

(இந்த பொது மற்றும் செய்முறைப் பரீட்சைகள் நடைபெறும் வளாகங்களுக்குப் பயணப் பொதிகள், கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.)

02. செய்முறைப் பரீட்சை

2.1. இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதியுடைய இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.3.4 ஆம் பிரிவின்படி இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு ஆசிரியர்களைச் ஆட்சேர்ப்பதற்கான செய்முறைப் பரீட்சைக்காகப் பின்வருமாறு தயாராகிச் சமூகமளிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

2.2. இப்பரீட்சையானது இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 'ஆ' இணைப்பிற்கு அமைவாகப் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்.

2.3. செய்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரரினால் வர்த்தமானி அறிவித்தலின் 10.3 குறிப்பு 10 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இனங்காணப்பட்ட தலைப்பொன்றின் கீழ் முன்வைப்பு ஒன்றை செய்தல் வேண்டும். இதற்காகப் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும். (இதன் போது தான் பல பாடங்களுக்குச் செய்முறைப் பரீட்சைக்கு முகங்கொடுப்பதற்குத் தகுதி பெற்றிருந்தாலும், தாங்கள் விண்ணப்பித்த வர்த்தமானி அறிவித்தலின் குறிப்பு 10/ குறிப்பு 13 இன் படி முன்வைப்பினை செய்ய வேண்டும். அந்த முன்வைப்புக்களுக்குரியதாக வழங்கப்படும் புள்ளிகள் தாங்கள் நேர்முகப் பரீட்சைக்காகத் தகுதி பெற்றுள்ள அனைத்துப் பாடங்களுக்கும் பொருந்தக்கூடியவாறு ஏற்றுக்கொள்ளப்படும். அத்துடன் செய்முறை நேர்முகப் பரீட்சை சபையின் தீர்மானமானது விண்ணப்பதாரர்களுக்கு அச் சந்தர்ப்பத்திலேயே அறியத் தரப்படமாட்டாது)

தொடர் இல.	செய்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் நியதிகள்	உச்ச புள்ளிகள் அளவு	சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகள்
1	நோக்கம் மற்றும் பிரவேசம்	05	02
2	ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு	05	02
3	தொடர்பாடலின் தெளிவு	05	02
4	நேர முகாமைத்துவம்	05	02
5	முன்வைப்பு நுட்பமுறைகளின் பயன்பாடு	05	02
மொத்தப் புள்ளிகள்		**25**	**10**

2.4. செய்முறைப் பரீட்சை முறைமை (விண்ணப்பங்கள் கோரப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் 10.3 ஆம் பிரிவின்படி மேற்கொள்ளப்படும்.)

I. செய்முறைப் பரீட்சைக்காக 5 நிமிடங்களுக்குக் குறையாத நேரம் வழங்கப்படும்.

II. செய்முறைப் பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளக்கூடிய உச்ச புள்ளிகள் அளவு இருபத்தைந்து (25) ஆகும்.

III. செய்முறைப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு நியதிகளுக்கும் குறைந்தபட்சம் 2 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

2.5. செய்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்குவதில் கருத்திற்கொள்ளப்படும் நியதிகளி நோக்கம்

I. நோக்கம் மற்றும் பிரவேசம்
வெற்றிகரமாக பாடத்தின் குறிக்கோள்களை தெளிவுபடுத்துதல் மற்றும் பாடத்திற்கு பிரவேசிக்கும் திறனை மதிப்பிடுதல்.

II. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஆசிரியரொருவர் என்ற வகையில் சிறந்த ஆளுமையைக் கொண்டிருப்பதும் கற்பித்தலின் போது சிறப்பாகக் குரலைக் கட்டுப்படுத்துவதற்குள்ள திறனை மதிப்பிடுதல்.

III. தொடர்பாடலின் தெளிவு
கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது உரிய விடயங்களைப் விளைதிறனுடன் கூடிய வகையில் தொடர்பாடல் செய்வதற்கான திறனை மதிப்பிடுதல்.

IV. நேர முகாமைத்துவம்
வழங்கப்படுகின்ற நேர வரையறையினுள் இலக்கை அடைந்துகொள்வதற்கான ஆற்றலை மதிப்பிடுதல்.

V. முன்வைப்பு நுட்பமுறைகளின் பயன்பாடு
இலக்கை அடைந்துகொள்வதற்காகச் முன்வைப்பு நுட்பமுறைகளை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கான திறனை மதிப்பிடுதல்.

2.6. செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், தாங்கள் விண்ணப்பித்த வர்த்தமானிப் பத்திரிகையின் குறிப்பு 4/ 6 இல் தரப்பட்டுள்ள ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களுக்கு தகுதி பெற்றிருப்பின், குறித்த அனைத்து பாடங்களுக்குமுரியதாக முன்வைப்புக்களை செய்முறைப் பரீட்சை சபையினரிடம் முன்வைப்பதற்கு ஆயத்தமாகி சமூகமளிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன், வர்த்தமானப் பத்திரிகையின் 10/ 13 இன் பிரகாரம் முன்வைப்பினைச் செய்தல் வேண்டும்.

3. மேற்கூறிய வர்த்தமானிப் பத்திரிகைப் பிரகாரமும், அமைச்சரவையினால் பெறப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய மாகாணப் அரச சேவை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் இந்த நேர்முகப் பரீட்சைகளுக்கான அழைப்புக் கடிதங்கள் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகர் ஒருவரால் அல்லது செயலாளரால் வெளியிடப்படும் என்பதால், அப் பொது நேர்முகப் பரீட்சைகளுக்கான அழைக்கப்பட்ட திகதி/ நேரம் ஆகியவற்றுக்குள் உரிய இடத்திற்கு வருகை தர வேண்டும் என்பதுடன், உரிய முறையில் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளாமல் அதற்காக வேறொரு நாளை அல்லது நேரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

4. மேற்கூறிய வர்த்தமானிப் பத்திரிகைப் பிரகாரம் தாங்கள் தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை என நேர்முகப் பரீட்சை சபையினரால் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பத்தில், அக் குறிப்பிட்ட தீர்மானம் இறுதித் தீர்மானமாகக் கருதப்பட்டுச் செயற்படுத்தப்படும்.

5. இப்பரீட்சைகளுக்குச் சமூகமளிப்பதற்காகப் பயணச் செலவுகள் அல்லது வேறு கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

6. இச் செய்முறைப் பரீட்சைக்குத் தேவையான வசதிகளாக (White Board, Marker Pen, Pins, Dusters) **மட்டுமே** செய்முறைப் பரீட்சை சபையினரால் வழங்கப்படும் என்பதுடன், தாங்கள் முன்வைப்புக்காக பிரிஸ்டல் போர்ட்/ குறிப்புகளைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றீர்கள் எனின் அப் பொருட்களைத் தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். அத்துடன் அப் பிரிஸ்டல் போர்ட் / குறிப்புக்களை தயாரிப்பதற்காக மேலதிக நேரம்/இடம் வழங்குதல் மேற்கொள்ளப்படாது என்பதால், அவற்றை நேர்முகப்பரீட்சைக்கு வருகை தரும் சந்தர்ப்பத்தில் தயார்படுத்திக்கொண்டு வருவதற்குப் பொறுப்புடன் செயற்படுதல் வேண்டும்.

நாலக களுவெவ

செயலாளர்